01 ஃபைல் 17-11.21

# செய்தி வெளியீடு

## குவைத் நாட்டில் வீட்டு வேலைக்கு பெண் பணியாளர்களை பணியமர்த்த அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தற்போது குவைத் நாட்டு நிறுவனத்துடன் 17.11.2021 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

முனைவர். சி.ந. மகேஸ்வரன், இ.ஆ.ப., அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், அவர்களின் பத்திரிக்கை செய்தியில் தெரிவித்திருப்பது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவுரை படியும், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல் படியும், வெளிநாட்டில் வேலை செய்ய விரும்பும் தமிழக மக்களுக்கு உடனடியாக அயல் நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத்தர அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என முனைவர். சி.ந. மகேஸ்வரன், இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இதை தொடர்ந்து வெளிநாட்டில் பணி அமர்த்த பல்வேறு நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகளை சந்தித்தும் பணிக்காலியிடங்களை சேகரித்தும் வந்ததில் குவைத் நாட்டிலுள்ள Kuwait Gate Foundation என்ற நிறுவனத்திடமிருந்து குவைத் நாட்டில் வீட்டு வேலை பணியாளராக பணிபுரிவதற்கு (Housemaid) 30 வயது முதல் 40 வயதுக்குட்பட்ட பெண் பணியாளர்கள் 500 நபர்கள் தேவைப்படுவதாக வந்த கடிதத்தின் மேல் உடன் நடவடிக்கை மேற்கொண்டு இதன் தொடர்பாக குவைத்நாட்டின் Kuwait Gate Foundation என்ற நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 17–11–2021 அன்று

வீட்டுப்பெண் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி

- ❖ வீட்டு பெண் பணியாளர்களாக அரபு நாடுகளில் பணிபுரிந்து அனுபவமுள்ளவர்களுக்கு மாத ஊதியம் ரூ.32,000/–மற்றும் அனுபவம் இல்லாதவர்களுக்கு மாத ஊதியம் ரூ.29,500/– வழங்கப்படும்.
- ❖ வயது வரம்பு 30 முதல் 40 வரை.
- ❖ மேலும் மருத்துவ பரிசோதனை கட்டணம், விசா, விமான பயணச்சீட்டு, உணவு, இருப்பிடம், மருத்துவம், காப்புறுதி மற்றும் இதர சலுகைகள் குவைத்நாட்டின் சட்டவிதிகளுக்குட்பட்டு வேலை அளிப்பவரால் வழங்கப்படும்.
- ❖ மாத சம்பளம் தவறாமல் வழங்க வேண்டும்.
- ❖ இந்த ஒப்பந்தம் இரண்டு வருடம் வரை நீடிக்கும், ரத்து செய்யாத பட்சத்தில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்படும்.
- ❖ குவைத் நாட்டின் கலாசசாரப் பண்புகள் குறித்த கையேடு பணியாளர்களுக்கு அவர்களின் தாய் மொழியில் வழங்க வேண்டும்.
- ❖ பணிபுரியும் இடத்தில் பணியாளருக்கு ஏதுவான சூழ்நிலை ஒருவாக்கி கொடுக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பணியில் சேர விருப்பமுள்ளவர்கள் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் இதர விவரங்கள் அறிய, சென்னையில் உள்ள அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவானத்தையோ அல்லது மாவட்ட வேலைவாய்ப்பு துறை தொழில்நெறி வழிகாட்டும் மைய அலுவலகத்தை அணுகுமாறு, அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், முனைவர் சி. ந. மகேஸ்வரன் இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

எனவே குவைத் நாட்டில் வீட்டு பெண் பணியாளராக பணிபுரிய விருப்பம் உள்ளவர்கள் தங்களது சுயவிவரங்களுடன் கூடிய விண்ணப்பத்துடன் கல்வித்தகுதி மற்றும் பாஸ்போர்ட் ஆகியவற்றின் நகல்கள் மற்றும் ஒரு புகைப்படத்துடன் omchousemaidkuwait21@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேற்கண்ட வேலைக்கான விவரங்களை இந்நிறுவனத்தின் வலைதளம்www.omcmanpower.com மூலமாகவும் இந்நிறுவன தொலைபேசி எண்கள் 044-22505886/044-22500417 மூலமாகவும் அறிந்துகொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தமானது 17.11.2023 வரை நடைமுறையில் இருக்குமென்பதால் விருப்பமுள்ள மனுதாரர்கள் இக்காலகட்டத்திற்குள் பதிவு செய்து கொள்ளலாம். மேலும், முதலில் பதிவு செய்யும் நபர்களுக்கு முதல் வாய்ப்பு வழங்கப்படும்.

இந்திய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தால் வழங்கப்பட்ட அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் முகவர்எண்.RC,No.B-0821/CHENNAI/CORPN/1000+5/308/84 ஆகும் என முனைவர். சி.ந. மகேஸ்வரன், இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**முனைவர் சி. ந. மகேஸ்வரன் இ.ஆ.ப,**
**நிர்வாக இயக்குநர்,**
**அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்,**
**கிண்டி, சென்னை.**

பெறுநர்:
அனைத்து பத்திரிகை ஆசிரியர்கள்
மற்றும் ஊடகங்கள் – பொதுமக்களுக்கு பயன் பட
வெளியீடு செய்ய வேண்டுகோளுடன் அனுப்பப்படுகிறது.